# கலைஞருக்கு அண்ணா வழங்கிய பாராட்டுகள்!

திராவிட நாடு இதழைத் தொடங்கி பேரறிஞர் அண்ணா அவர்கள் காஞ்சியில் நடத்திக் கொண்டிருந்த நேரம். அதில், கருணாநிதி எனும் பெயரிட்டெழுதிய "இளமைப் பலி தலைப்பில் ஒரு கட்டுரையும், அடுத்த இதழில் "பகுத்தறிவுப் பரமசிவம் என்ற தலைப்பில் மற்றொரு கட்டுரையும் எழுதி வெளியாகி இருந்தன.

ஒரு சமயம் திருவாரூர் வந்த அண்ணா அவர்கள் "இங்கிருந்து எழுதுகிறாரே. கருணாநிதி எனும் ஒருவர்?... அவரை நான் பார்க்க வேண்டும் என்று ஆவலோடு அழைத்து வரச் சொல்லியிருந்தார். தோழர்கள் அண்ணாவிடம் அழைத்து வந்து நிறுத்திய அந்த இளைஞரைப் பார்த்த அண்ணா வியந்து போனார். காரணம்; கட்டுரை எழுதியவர் தோற்றத்தில் ஓர் இளைஞராக இருப்பார் என்று நினைத்திருந்தார் அண்ணா.

ஆனால், அழைத்து வரப்பட்டவரோ (கலைஞர்) 14 வயது பையனாக இருந்ததை எண்ணி ஆச்சரியப்பட்ட அவர்; "நீ படிக்கின்றாய் தானே? படி.. படி.. இப்போது எல்லாம் கட்டுரை எழுதிக் கொண்டிருக்காதே... என்று தம் முன் நின்று கொண்டிருந்த சிறுவன் கருணாநிதி எனும் கலைஞரை அன்புடன் அறிவுரை கூறிக் கடிந்து கொண்டார் அண்ணா. அன்று முதல் கலைஞருக்கும் அண்ணாவுக்கும் நட்பு தொடர்ந்தது!

அந்தச் சிறுவன் கலைஞர் தாம் பிற்காலத்தில் அண்ணாவோடு இயக்கத்தில் தொடர் பயணஞ் செய்து அவருக்குப் பின்னர் கழகத் தலைவராக உருவான வரலாறு நீண்டதாகும். தமக்குப் பின் கலைஞர் தான் என்பதைப் பல்வேறு தருணங்களில் சுட்டிக் காட்டிக் கழகத்தவர்க்கும், தமிழ் உலகுக்கும் அடையாளம் தந்து சென்றுள்ளார்.

பிரதமர் இந்திரா காந்தி கொண்டு வந்த நெருக்கடி மிசா காலத்தில், இலட்சக்கணக்கான கழகத் தொண்டர்களைச் சிறைச்சாலைகள் விழுங்கிக் கொண்டு இருந்தன. முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சியை இழந்ததுடன், தாம் நடத்திய இரண்டாவது ஜனநாயக உரிமைப் போராட்டத்தால் கழகத்தைக் காத்ததோடு, இந்திய நாட்டையும் மீட்டவர். சுதந்திரப் போராட்டம் நடத்திய மகாத்மா காந்தியின் மறுபதிப்பாகத் திகழ்ந்தார்.

ஈழத் தமிழர்களுக்கு இன்னல் வந்த போதெல்லாம், துடித்தெழுந்த அரிமாவாகவும், தனது சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பையே உதறித் தள்ளி டெசோ மாநாடு மூலம் உலக அரங்கிற்கு செய்திகளைக் கொண்டு சென்றவர்.

மதவாத சக்திகள் கரசேவை என்ற பெயரால், சிறுபான்மை மக்களின் பாபர் மசூதியை இடித்து இந்திய வீதிகளில் கலிங்கப் போராக மாறி இரத்த ஆறு ஓடிய போது; மக்களைக் காக்கும் அறப்போராட்டத்தில், மதவெறி மாய்த்திடுவதில் "மனிதரில் புனிதராக வலம் வந்தவர்.

கட்சியிலும், ஆட்சியிலும் சாதனைகள் பல நிகழ்த்திக் காட்டிய அரசியல் விவேகானந்தர்! சோதனைகளையும், வேதனைகளையும் தாங்கி அரசியல் காட்டாறுகளை பலப் பல கடந்து கல், முள்ளுகளைக் கால்களுக்கு மெத்தையாக்கி இரத்தச் சகதியில் பயணம் செய்து பழகிக் கொண்டவர்.

முதுமை வந்து உடலின் கதவைத் தட்டிய போதும்; மூலையில் முடங்கிப் படுத்தவர் அல்லர்! எதிர்க்கட்சியாகக் கழகம் இருந்த நாளிலும் நாள்தோறும் எழுதினார்; முழங்கும் அரிமாவாகப் பேசினார்! ஆட்சியாளரின் தவறுகளை உடனுக்குடன் சுட்டிக் காட்டுவதில் வெளிச்சக் கதிர்களை வீசும் சூரியனாகவே இருந்து செயல்பட்டு வந்துள்ளார்.

இப்படிப்பட்ட கலைஞர் அவர்களை அண்ணா அவர்கள், பல்வேறு தருணங்களில்,இந்த இயக்கத்தைக் கட்டிக் காக்கும் ஒருவர் உண்டு என்றால்; "அவர் கலைஞர் தான் என்று அவ்வப்போது எழுதியும், பொதுக் கூட்டங்களில் பேசியும் பதிவுகள் செய்திருக்கிறார்.

இதோ அவற்றில் சில வரலாற்றுப் பதிவுகளைத் தோழர்களின் நினைவுக்கு கொண்டு வருகிறேன்.

குளித்தலை சட்டமன்ற உறுப்பினராக இருந்து பணியாற்றி வந்த நேரம்... 1961ஜனவரி 4 ஆம் நாள் கேரள தமிழ்நாடு எல்லையில் "வண்டி பெரியார் " எனும் ஊரில் கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்த ஒரு பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தார் கலைஞர். அவருடன் அன்பில், மன்னை, மாயவரம் காந்தி, இலட்சிய நடிகர் எஸ். எஸ்.ஆர்., மதுரை முத்து, மாவீரன் இராஜாங்கம், போன்றோர் சென்றிருந்தனர். கூட்ட மேடையில் ஏறி "சில்வர் ஸ்டார் என்ற கழகத் தோழர் முதலில் பேசும் போது, வேகமாக எச்சரிக்கை செய்யும் நோக்கத்தில் வார்த்தைளை அள்ளி வீசி, கேரளக் காவல்துறை அமைச்சர் சாக்கோவைத் தாக்கிப் பேசி விட்டார். அவ்வளவுதான்... அதனைப் பொறுக்காத மலையாளிகள் சூழ்ந்து கொண்டனர்.

மேடையில் இருந்த கலைஞர் உள்ளிட்ட அனைவரையும் தாக்கும் நோக்கத்தில், மேடை நோக்கி கலகக் காரர்கள் வீசிய கற்கள், கம்புகள் பறந்தன. மின் விளக்குகள் உடைந்தன! மின்சாரம் அனைத்தும் துண்டிப்பு; மேஜை நாற்காலிகள் பறக்கும் அளவுக்குத் தாக்குதல் எனக் கடுமையான வன்முறை நிகழ்வுகள் நடந்தன. எவ்வளவோ சமாதானம் செய்தும் இரு தரப்புக்கும் சமரசம் ஏற்படாமல், வன்முறை வெறித் தாக்குதல் தொடர்ந்தது.

அதனால், கலைஞருடன் வந்தவர்கள் கூட்ட நெரிசலில் உயிருக்குத் தப்பி ஒவ்வொருவராக வெளியேறி, நாலாத் திசைகளிலும் சிதறி ஓடி விட்டனர். கலைஞரைக் கைத் தாங்கலாக அன்பில் தர்மலிங்கமும், மன்னை நாராயண சாமியும் சுற்றி வளையம் போட்டுப் பிடித்துக் கொண்டு, காட்டு வழியே பல கிலோமீட்டர் தூரம் நடந்து, கடந்து தமிழக எல்லையில் உள்ள கம்பம் நகருக்கு வந்து சேர்ந்தனர்.

அந்த ஆபத்தில் இருந்து தப்பித்த கலைஞரின் நிலை பற்றிக் கேட்டறிந்த நிலையில்; காஞ்சியிலிருந்து சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தார் பேரறிஞர் அண்ணா. அவருடன் காரில் மறுநாள் வந்து சேர்ந்த அன்பில் தருமலிங்கமும் , இளமுருகு பொற்செல்வியும் பயணம் செய்து கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் தான் அண்ணா அவர்கள், காரின் பின் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்த அன்பிலிடம் கூறிய வார்த்தைகள் என்ன தெரியுமா?

"அன்பில்!... யார் வேண்டுமானாலும் இந்தக் கழகத்திற்கு வரலாம்; இருக்கலாம்; போகலாம்...! ஆனால், ஒரு கருணாநிதியைப் பெறுவது கடினம்.. அவரிடம் மிகுந்த கவனமாக இருக்கச் சொல்.. என்று கழகத்திற்குக் கலைஞரின் தேவையை அன்றே வண்டிப் பெரியார் ஆபத்து நிகழ்வைச் சுட்டிக்காட்டி உணர்த்தியவர் தாம் பேரறிஞர் அண்ணா அவர்கள் !

ஒருமுறை தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்து கொள்ள மன்னார்குடி கூட்டத்திற்கு சென்றிருந்தார் அண்ணா. அந்த மேடையில் கலைஞர் உள்ளிட்ட பலரும் இருந்தார்கள்.அண்ணா அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளுக்குச் செல்ல வேண்டியவராக இருந்தார்.அதனால் பேச்சு தொடங்கிய அண்ணா மேடையில் இருந்த கலைஞரைச் சுட்டிக்காட்டி "....நான் வரலாற்றின் முற்பகுதியை எழுதிவிட்டேன்; இதன் பிற்பகுதியை என் தம்பி கருணாநிதி எழுதுவார்...! இந்தக் கூட்டம் தொடர்ந்து நடைபெறும்.. எனக் குறிப்பிட்டு விட்டுப் புறப்பட்டுச் சென்றார். இயக்கத்தின் அடையாளத்தை அன்றே கலைஞர் அவர்களைச் சுட்டிக் காட்டியவர் பேரறிஞர் அண்ணா.

1962 ஆகஸ்ட் போராட்டத் தொடங்குவது என்று அண்ணா தலைமையில் முடிவு செய்யப்பட்டிருந்தது. இந்தி மொழியை ஆட்சி மொழி என்ற அரசியல் அமைப்புச் சட்டத்தில் நுழைத்து வைத்துக்கொண்டு நடைமுறைப்படுத்த செய்த சூழ்ச்சியை எதிர்த்தும், தென்னக மக்களை இரண்டாந் தரக் குடிமக்களாக ஆக்கும் நிலையை எதிர்த்தும் கலைஞர் தலைமையில் ஒரு போராட்டக் குழு அமைக்கப்பட்டது. போராட்டக் குழுத் தலைவர் கலைஞருக்குத் தேனி நகரில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில்




இலட்சிய நடிகர் இராஜேந்திரன் தலைமையில் அண்ணா வீரவாளும், கேடயமும் பரிசாக அளித்துப் பேசினார்.

கழக வரலாற்றிலேயே கருணாநிதியின் தொண்டு நல்ல இடத்தைப் பெற்றுள்ளது. ஒரு ஆற்றி வரும் பணி இந்தியாவிலேயே திமுகவை ஒரு கேள்விக்குறியாக்கியிருந்து வருகிறது. அவரது தொண்டிலையே மறக்க முடியாத நிகழ்ச்சி எதுவென்றால்; திருவண்ணாமலை வெற்றிக்கு உழைத்தது மட்டுமல்ல; சென்னை மாநகராட்சி நம் வசமாக அவர் ஆற்றிய தொண்டு மட்டும் அல்ல; அவர் சிறு வாலிபராக கொள்கைப் பிரச்சாரம் நடத்திய போது, அவரது பிரச்சாரத்தால் முறுக்கேறிய காங்கிரசார் அவரை அடி அடின்னு அடித்து, ஆள் தொலைந்து விட்டான் எனக் கருதமளவுக்கு உதைத்து, காங்கிரஸ் கொட்டத்தை அம்பலப்படுத்தும் போக்கிரி சிறுவனை முடித்து விட்டோம் என்று இரத்தம் பீறிடும் அளவிற்குப் புதுவையில் காட்டுமிராண்டித்தனமாக வெறித்தனமாகத் தாக்கிய சம்பவம் தான் தம்பி கருணாநிதியை இந்த அண்ணன் பாராட்டுகிறேன் என்றால்.... எடுத்த காரியத்தை எல்லாம் சிறப்பாகச் செய்து முடிக்கும் திறமை பெற்றவர் கருணாநிதி என்பதுதான் காரணம்!... என்று புகழ்ந்து பேசியது யாரும் மறக்க முடியாது.

1965 ஆம் ஆண்டு நடைபெற்ற மாணவர் போராட்டத்தை இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மாணவர்கள் கொதித்தெழுந்தனர். மத்திய, மாநில அரசுகள் இந்தியைத் திணிக்கும் முற்பட்டுவிட்டன என்பது உணர்ந்து கொண்ட மாணவர் பட்டாளம் அடக்குமுறைகளுக்கு எதிராக அணி திரண்டது. "இந்தி ஒழிக: தமிழ் வாழ்க! என்று மாணவர் பட்டாளம் கிளம்பி மாநில முழுவதும் போராட்டங்கள் நடத்தி வந்தனர். துப்பாக்கிச் சூடு நடந்து பல மாணவர்கள் சாவூருக்கு அனுப்பப்பட்டனர். மாணவர்களைத் தூண்டி விட்டார் என்று கூறிப் பாதுகாப்பு சட்டத்தில் (16.01.1965) கைது செய்து சென்னையில் இருந்து பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார் கலைஞர். பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்ட தமிழ்த் தலைவர் கலைஞர் ஒருவரே.

இது குறித்து பாளையங்கோட்டை சென்ற அண்ணா அவர்கள் சிறையில் கலைஞரை சந்தித்து விட்டு அன்று நெல்லையிலே நடைபெற்ற கழகப் பொது கூட்டத்தில் பேசினார். " இந்துக்களுக்குக் காசி எப்படிப் புனித பூமியோ... முஸ்லிம்களுக்கு மெக்கா எப்படிப் புனித பூமியோ... கிறிஸ்தவர்களுக்கு ஜெருசலம் எப்படிப் புனித பூமியோ...அதுபோல என் தம்பி கருணாநிதி தனிமைச் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் பாளையங்கோட்டைச்சிறை தான் எனக்கு யாத்திரைத் தளம் ! புனித பூமி!... என்று கலைஞரைப் பெருமைப் படுத்தி அவரது தியாகத்தைப் பாராட்டிப்பேசினார்.

**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக் குழுத் தலைவர்


"தன்னை வெல்வான்! தரணியை ஆள்வான்!... என்று கலைஞர் பற்றிக் காஞ்சி இதழில் அண்ணா 1965 ஆண்டு ஏப்ரல் 3 இல் கலைஞரைப் பற்றி எழுதினார்.

1959 ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாநகராட்சித் தேர்தலில் கழகம் போட்டியிட அண்ணா தயங்கினார். ஆனால், கலைஞர் தாமே முன்வந்து, அவரது தலைமையில்கழகச் செயல் வீரர்களோடு பாடுபட்டார். தி.மு.க. அமோக வெற்றி பெற்றது. கலைஞரது முயற்சியால் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் கழகம் 90 இடங்களில் போட்டியிட்டு 45 இடங்களில் அதன் நிர்வாகத்தை முதன் முதலில் கைப்பற்றியது. முதல் மேயராக அ.பொ. அரசு பதவி ஏற்றார். அந்த வெற்றிக்குப் பாடுபட்டதற்காகச் சென்னைக் கடற்கரையில்கலைஞருக்குக் கணையாழி அணிவித்துப் பாராட்டிப் பேசினார்.

"நான் என் மனைவி, மக்களுக்குக் கூட ஒரு நகை வாங்குவதற்காகக் கடைக்குப் போனது கிடையாது; இந்த 45 பொல்லாத தோழர்கள் வெற்றியினாலே, நான் கடைக்குச் சென்று கணையாழி வாங்கி அளிக்க வேண்டியவனாகி விட்டேன்; அந்தத் தங்கம் .. நல்ல தங்கக் குணம் படைத்த கருணாநிதியிடம் செல்கிறது; அது அவருக்கு மேலும், மேலும் கீர்த்தியை வழங்கும். அவர் பெறும் கீர்த்தியின் மூலம் நம்முடைய கழகத்திற்கு நல்ல பேரை நிச்சயம் தேடித் தரும் என்று வரலாற்றுப் புகழுரை பகிர்ந்தார் அண்ணா.

இதுபோல 1967 ஆம் ஆண்டு ஜனவரி 1 விருகம்பாக்கத்தில் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. கழகம் வெற்றி பெற்று முதன் முதல் ஆட்சி அமைவதற்குக் காரணமாகக் கலைஞர் அண்ணாவுடன் துணை நின்றார். பொருளாளராக இருந்த கலைஞர், "11 இலட்சம் ரூபாய்களை நான் அறிஞர் அண்ணா அவர்களிடம் ஒப்படைக்கிறேன். அத்துடன் அதைச் சேர்க்க காரணமாக இருந்த பல இலட்சக்கணக்கான இதயங்களையும் அண்ணாவிடம் ஒப்படைக்கிறேன் என்று கலைஞர் மகிழ்ச்சி பொங்க கையில் இருந்த பையை அண்ணாவிடம் தந்தார். பின்னர் பேசிய அண்ணா, "தம்பி உனக்கு நிதி என்று பெயரிட்டார்களே.. உன் தாயார்! சும்மாவா பெயர் சூட்டி விட்டார்கள்.... என்று அண்ணா கூறிப் பலவாறு புகழ்ந்து பேசியதும் கூட்டத்தில் பலத்த கைதட்டல் ஒலி எழுந்தது.

இந்திய திருநாட்டின் மூத்த அரசியல் தலைவராக இருந்த கலைஞர், பல இந்திய குடியரசுத் தலைவர்கள், பிரதமர்கள் உருவாக்கி இமயமாக நின்றவர். இந்தியாவில் ஜனநாயகத்திற்கு அவ்வப்போது ஆபத்து வந்த போதெல்லாம் அபாயச் சங்கொலி எழுப்பி அரணாக நின்றவர்; சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் பாதுகாப்பதற்காக கொண்டு வரப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தில் மாணிக்கக் கல்லாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறார்.

தமிழ் மொழி, இனம், மானம், மரபு, பண்பாடு பாதுகாத்த போரில் சேர, சோழ, பாண்டியர்களாகப் பிறப்பெடுத்துப் புகழ் பரப்பி வந்தவர். தமிழகத்தை காக்க பல்வேறு நேரங்களில் பல்வேறு சிறைக்கொட்டடிகள் அடைப்பட்டுத் தியாகத் தழும்புகள் பல ஏற்றவர். மிக, மிகச் சாதாரண சமுதாயத்தில் பிறந்து, பின்தங்கிய நிலப்பரப்பில் எந்த ஒரு பின் புலனும் இல்லாமல் தன் உழைப்பு, முயற்சி என்கின்ற ஆயுதங்களை மட்டுமே உடைமைகள் ஆக்கிக் கொண்டு நடை போட்டு வந்தவர். கலைஞர் பல்லாண்டு வாழ்க! வாழ்க!! எனப் போற்றுவோம்! அவர் வழியில் கழகத்தை வழிநடத்தும் தளபதியின் கரத்தை வலுப்படுத்துவோம்!





ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட 162 வது வார்டு ஆலந்தூர் பகுதியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். அருகில் மண்டலக்குழு தலைவர் என்.சந்திரன், மாமன்ற உறுப்பினர் ஏ.சாலமன், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெய்காந்த் பாரதி, வட்டச் செயலாளர்கள் சரவணன், ஜெ.நடராஜன், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கட்டணமில்லா அறுபடைவீடு ஆன்மிகப் பயணம் - தகுதியுடையோர் விண்ணப்பிக்கலாம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஆக.7-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா அறுபடை வீடு ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் தகுதியுடைய மூத்த குடிமக்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மானசரோவர் மற்றும் முக்திநாத் ஆகியவற்றிற்கு ஆன்மிகப் பயணம் சென்று வருபவர்களுக்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கப்பட்டு வருவதோடு, ஆடி மாதத்தில் அம்மன் திருக்கோயில்களுக்கும், புரட்டாசி மாதத்தில் வைணவ திருக்கோயில்களு க்கும், இராமேசுவரத்திலிருந்து காசிக்கும், அறுபடை வீடுகளுக்கும் பக்தர்கள் கட்டணமில்லாமல் ஆன்மிகப் பயணமாக அழைத்துச் செல்லப்பட்டு வருகின்றனர்.

2025 - 2026 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப் பெருமான் வீற்றிருக்கும் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, திருத்தணி, பழமுதிர்சோலை ஆகியவற்றிற்கு மூத்த குடிமக்கள், ஒரேமுறையாக சென்று தரிசனம் செய்திடும் வகையில் கட்டணமில்லாமல் 60 வயது முதல் 70 வயதிற்குட்பட்ட 2,000 பக்தர்கள் அழைத்து செல்லப்பட உள்ளனர்.

ஆன்மிகப் பயணம் செல்ல விரும்பும் பக்தர்கள் இந்து மதத்தை சார்ந்தவராகவும், 60 வயதிற்கு மேல் 70 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-க்கு மிகாமல் இருப்பதோடு, அதற்கான வருமான சான்றிதழை வட்டாட்சியரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும். போதிய உடல் தகுதி உள்ளதற்கான மருத்துவ சான்றுடன், ஆதார் நகல் இணைக்கப்பட வேண்டும்.

இந்த ஆன்மிகப் பயணத்திற்கான விண்ணப்ப படிவங்களை அந்தந்த மண்டல இணை ஆணையர் அலுவலகங்களில் நேரில் பெற்றோ அல்லது www.hrce.tn.gov.in என்ற இந்து சமய அறநிலையத்துறை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்தோ விண்ணப்பிக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை உரிய சான்றுகளுடன் இணைத்து சம்பந்தப்பட்ட மண்டல இணை ஆணையர் அலுவலகத்தில் 15.09.2025-க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

அறுபடைவீடு ஆன்மிகப் பயணம் தொடர்பான விவரங்களுக்கு துறையின் இணையதளத்திலோ அல்லது 1800 425 1757 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொண்டு தெரிந்துக் கொள்ளலாம். ஆகவே, இந்த ஆன்மிகப் ஆன்மிகப் பயணத்தில் பங்கேற்க விரும்பும் தகுதியுடைய மூத்த குடிமக்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

# உலகத்திலே திருநங்கைகள் பாதுகாப்பாக இருக்கும் இடம் தமிழ்நாடு தான்!

## அமைச்சர் ஆவடி சாமு.நாசர் – திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவி வழங்கி சிறப்புரை!

திருவள்ளூர் ஆக 07;

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு க ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பொன்னேரி கும்மிடிப்பூண்டி தொகுதியை சார்ந்த 177 திருநங்கைகளுக்கு நிதி உதவி அரிசி மளிகை பொருட்கள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகளுக்கு 67 நபர்களுக்கு ஊக்க தொகை மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஏற்பாட்டில் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது

இதில் மாவட்ட அவைத்தலைவர் மு.பகலவன், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, எம்.எல்.ரவி, மு.கதிரவன், மாவட்ட பொருளாளர் எஸ். ரமேஷ் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்

பொதுக்குழு உறுப்பினர்கள் கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், பி.வெங்கடாஜலபதி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், ஏ.வி.ராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்துகொண்டு திருநங்கைகளுக்கு நிதி உதவி அரிசி மளிகை பொருட்கள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகளுக்கு ஊக்கதொகை வழங்கி சிறப்புரையாற்றினார்

அப்போது பேசிய அமைச்சர் ; பெண்களைப் போல மூன்றாம் பாலினத்தவரையும் சமுதாயம் மதிக்கும் வகையில், அவர்களை கண்ணியத்துடன் அழைக்க வேண்டும் என்னும் எண்ணத்தின் வெளிப்பாடாக "திருநங்கை" என்ற மரியாதைக்குரிய சொல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அதிகாரப்பூர்வமாக அறிமுகப்படுத்தப் பட்டது.

திருநங்கைகளுக்கு முழுமையான சமூக பாதுகாப்பு மற்றும் சமூக அங்கீகாரத்தை வழங்கி அவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் நல வாரியம் 15.04.2008ல் சமூக நலத்துறை அமைச்சரை தலைவராகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. தற்போது இந்நல வாரியமானது 2.04.2025 அன்று திருத்தியமைக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

திருநங்கைகள் நல வாரியத்தின் வாயிலாக அடையாள அட்டை, குடும்ப அட்டை, வீட்டுமனைப் பட்டா, மருத்துவக் காப்பீட்டு அட்டை, தையல் இயந்திரம், சொந்த தொழில் தொடங்கிட மானியம், சுய உதவிக்குழுக்கள் அமைத்து பயிற்சி அளித்தல், தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் 40 வயதிற்கு மேற்பட்ட ஏழ்மை நிலையில் உள்ள ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதம் ரூ.1500/ வீதம் ஓய்வூதியத் தொகை, திருநங்கைகள் உயர்கல்வி பயின்றிட கல்விக் கட்டணம், விடுதி கட்டணம் மற்றும் அனைத்து கட்டணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் மற்றொரு முயற்சியாக, திருநங்கைகள் சமூகத்தின் கல்வி மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையிலும், உயர் கல்வி கற்கும் திருநங்கைகளை ஊக்குவிக்கும் வகையிலும் தமிழ்நாடு அரசு புதுமைப் பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் வழங்கப்படும் 1000 ரூபாய் ஊக்கத் தொகை இனி திருநங்கையர்களுக்கும் கிடைக்கும் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

மேலும், அவர்களின் கண்ணியமான வாழ்வை உறுதி செய்யும் நோக்கில், முதற்கட்டமாக சென்னை, ஆவடி, தாம்பரம் மாநகர ஊர்க்காவல் படையில் திருநங்கையினரை பணியமர்த்த தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. இந்த முன்முயற்சிகள் திருநங்கைகளின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதிலும், அவர்களுக்கு சமூகத்தில் சமமான அங்கீகாரம் கிடைப்பதிலும் முக்கிய பங்காற்றுகின்றன. அதற்குக் காரணம் திராவிட முன்னேற்ற கழகம் அரசு தான்

2021ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் "சிறந்த திருநங்கை விருது" வழங்கப்பட்டு வருகிறது.

திருநங்கைகள் தினமான ஏப்ரல் 15ஆம் நாளில் விருது வழங்கி சிறப்பிக்கப்படுகிறது

வாழ்வாதாரச் செலவுகளுக்கு வருமானம் ஈட்ட இயலாத 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற ஏழ்மை நிலையிலுள்ள திருநங்கைகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்தது. அந்த ஓய்வூதியத் தொகையினை முதலமைச்சர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்கள் ரூ.1,500/ ஆக உயர்த்தி உத்திரவிட்டார்கள்.

இத்திட்டத்தின் கீழ், 2022 2023ஆம் நிதியாண்டிற்கு 1.311 திருநங்கைகளுக்கு ஓய்வூதியமாக ரூ.153 கோடியும். 2023 2024ஆம் நிதியாண்டில் 1,482 திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2.49 கோடியும் 2024 2025ஆம் நிதியாண்டிற்கு ரூ.2.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்து 1,599 திருநங்கைகளுக்கு 2025 மார்ச் மாதம் வரை ரூ.281.76 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2025-2026ஆம் நிதி யாண்டிற்கு 15.3.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் 1.760 திருநங்கைகள் பயன்பெற்று வருகின்றனர்

இது போன்ற பல்வேறு திட்டங்களை திருநங்கைகளுக்காக செயல்படுத்திக் கூடிய ஒரே அரசு திராவிட முன்னேற்றக் கழகம் தான் திருநங்கைகளுக்கு என்றும் நமது தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் பாதுகாப்பாகவும் அரணாகவும் இருந்து வருகிறார் தமிழகம் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இந்தியாவில் உள்ள மாநிலங்களே பெருமைப்படுவருக்கு அளவிற்கு பொறாமைப்படுவ அளவிற்கு அனைத்து உயிரினங்களும் இந்த இடத்தில் வாழ்கின்ற மக்களுக்கும் மானத்தோடு வாழ வேண்டும் அதே நேரத்தில் தமிழ் உணர்வோடு வாழ வேண்டும் என்று உணர்வு அடிப்படையில் அனைவருக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கி நல்லதொரு ஆட்சி வழங்கி கொண்டிருக்கும் ஒரே அரசு அது திராவிட முன்னேற்ற கழகம் அதனை இயக்கிக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே யாரும் மறந்து விடக்கூடாது முதல்வர் அவர்களுக்கு என்றும் நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் பி.ஜெ.மூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.எச்.சேகர், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வெ.அன்பு வாணன், மாநில நிர்வாகிகள் ஜி ஸ்டாலின், ராபர்ட் ராஜதுரை,

ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் டி.கே.சந்திரசேகர், ந.பரிமளம், ஆ.சத்தியவேலு, ஜான் (எ)பொன்னுசாமி, மு.முரளிதரன், ஆ.ராஜா, கா.சு. ஜெகதீசன், தே.உதயசூரியன், வே. ஆனந்தகுமார், ஜி.ரவிக்குமார், அபிராமிக்குமரவேல், க.சு.தமிழ் உதயன், இரா.அறிவழகன், பி.முத்து, பேரூராட்சி மன்ற தலைவர்கள் ருக்மணி மோகன்ராஜ் , அலெக்சாண்டர் , எம்.கேசவன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் கே. வி .லோகேஷ், முகமது அலவி , சம்பத், ஜி.பி.வெங்கடேசன், வி.பி.ரவிக்குமார் , ஜெயலலிதா சசிதரன், தேசராணி தேசப்பன், ஜி.சுமன், ஜி.ரமேஷ், ரோஸ் பொன்னையன், மற்றும் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் தலைவர்கள் துணைத்தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் கிளைக் கழக வார்டு கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி முடிவில் முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து.தமிழரசன், முன்னாள் ஊராட்சி செயலாளர் எம்.டி.ஜி.கதிர் வேல் ஆகியோர் நன்றி கூறினார்கள்.





திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7 ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் 177 திருநங்கைகளுக்கு நிதி உதவி நலத்திட்டம் உதவிகள் மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகளுக்கு 67 நபர்களுக்கு ஊக்கதொகை வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகள் உதவித்தொகை வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் மு.பகலவன், பி.ஜெ. மூர்த்தி, சி.எச்.சேகர், வெ.அன்புவாணன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, மு.கதிரவன், கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், பி.வெங்கடாஜலபதி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், ஏ.வி.ராமமூர்த்தி, ஜி.ஸ்டாலின், சி.ஜெரால்டு, ராபர்ட் ராஜதுரை, ஒன்றிய நகர பேரூர் கழக பேரூர் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள் உள்ளனர்.